விகடன்

# தீபாவளி மலர் 2023

## எல்லோரும் இன்புற்றிருக்க...



# குடலிறக்கமா? தள்ளிப்போட வேண்டாம்!



நம் உடம்பில் ஏற்படும் குறைபாடுகளில் குடலிறக்கம் எனப்படும் *Hernia* மிக முக்கியமானதாகும். ஆனால் குடலிறக்கத்தைப் பற்றிச் சரிவரத் தெரியாததால், பாதிப்புகள் ஏற்பட்ட பின்னரே நிறைய பேர் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வருகிறார்கள்.

## குடலிறக்கம் (Hernia)

நமது வயிற்றுப் பகுதியில் உள்ள தசைநார்கள் பழுது அடைந்து இருந்தாலோ அல்லது பிறவிலேயே தசை பழுது அடைந்து துளையுடன் இருந்தாலோ, வயிற்றின் உள் இருக்கும் குடல் அத்துளையின் வழியாக இறங்கி வருவதையே குடலிறக்கம் (*Hernia*) என்கிறோம்.

## குடலிறக்கத்திற்கான காரணங்கள்:

**• தொடர் இருமல் • சிறுநீர் அடைப்பு பாதிப்புகள் (Prostate வீக்கம் மற்றும் சிறுநீர்ப்பாதை சுருக்கம்) • மலச்சிக்கல் • உடல் பருமன் • அதிகமான எடை மற்றும் பளு தூக்குதல் • அடிக்கடி குழந்தை பெறுதல்** போன்றவை மிக முக்கியமான காரணங்கள்.

மேலும், குடலிறக்க பாதிப்பு, பிறந்த குழந்தைகள் முதல் எந்த வயதினருக்கும் ஆண், பெண் வித்தியாசம் இல்லாமல் வரும்.

## குடலிறக்க வகைகள்:

ஹெர்னியா உடம்பில் வரும் இடத்தைப் பொருத்து *Inguinal Hernia, Umbilical Hernia, Incisional Hernia* மற்றும் *Femoral Hernia* என பல வகைப்படும். ஆண்களுக்கு அடிவயிற்றில் இடுப்பு பகுதிக்குக் கீழே வரும் குடலிறக்கத்தை *Inguinal hernia* என்கிறோம். இந்த வகைதான் அதிகளவு வரும் குடலிறக்கம் ஆகும். தொப்புளில் ஏற்படும் குறைபாடுகள் காரணமாக, குடல் இறங்கி வருவதையே தொப்புள் குடலிறக்கம் என்கிறோம்.

வயிற்றில் அறுவை சிகிச்சை (சிசேரியன், கர்ப்பப்பை அகற்றுதல், கல்லீரல், கணையம், இரைப்பை, குடல் மற்றும் கேன்சர் ஆபரேஷன்) செய்த பிறகு, பக்கத்தசைகள் பலவீனப்பட்டு, தையல் விட்டுப் போவதால் ஏற்படும் குடலிறக்கத்தை வெட்டுசார் குடலிறக்கம் (*Incisional Hernia*) என்கிறோம்.

## குடலிறக்கத்தின் பாதிப்புகள்:

குடலிறக்கம் உள்ள இடத்தில் வீக்கத்துடன் வலி உண்டாகும். சில நேரங்களில் குடலடைப்பு ஏற்படும். உடனடியாக அறுவை சிகிச்சை செய்யாவிட்டால் குடல் கெட்டுப்போகும்.

## குடலிறக்கத்தை சரிசெய்யும் சிகிச்சை முறைகள் :

குடலிறக்கத்தை மருந்தால் குணப்படுத்த முடியாது அதற்கு அறுவை சிகிச்சையே நிரந்தரத் தீர்வாகும். இதனை திறந்தவெளி அறுவை சிகிச்சை (*Open Method*), லேப்ராஸ்கோப்பி (*Laparoscopic Method*) மற்றும் *Robotic* அறுவை சிகிச்சை முறையிலும் சரி செய்யலாம்.

வயிற்றில் மேல் உள்ள தசைப்பகுதி அதிக அளவு பழுது அடைந்து இருந்தாலும், நவீன *Abdominal wall reconstruction(AWR)* முறையில் சரி செய்ய முடியும்.



## குடலிறக்கம் வராமல் தடுக்கும் வழிகள்:

1. **மலச்சிக்கலைத் தவிர்த்தல்**
2. **நீண்ட நாள் இருமலுக்குத் தகுந்த சிகிச்சை எடுத்தல்**
3. **சிறுநீர்ப் பாதை அடைப்பு ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளுதல்**
4. **அதிக எடையுள்ள பொருட்களைத் தூக்குவதைத் தவிர்த்தல்**
5. **உடல் பருமன் அடையாமல் பார்த்துக் கொள்ளுதல்**
6. **புகைப்பிடித்தல் மற்றும் மதுப்பழக்கத்தை விட்டு விடுதல்.**

குடலிறக்கத்திற்கான ஆபரேஷன் செய்த பிறகு, நாம் மீண்டும் பழைய மாதிரியே வேலை செய்ய முடியாது என்று கூறுவது முற்றிலும் தவறான கருத்தாகும். சிறிது கால ஓய்விற்குப் பிறகு நாம் எல்லா வகையான வேலைகளையும் மற்றவர்களைப் போல செய்ய முடியும்.



Dr. R.கண்ணன்
MS., DNB (SGE), FACS (USA), FICS., FAIS., FMAS., FIAGES., FACRSI., DMAS(France)., E-FIAGES., FALS (UGI)., FALS (HPB)., FALS (Colorectal)., FALS (Hernia)., FALS (Onco)
இரைப்பை, குடல், கல்லீரல் மற்றும் குடலிறக்கம் அறுவை சிகிச்சை நிபுணர்

For Appointment:
PH/23
Prime Indian Hospitals
Arumbakkam, Chennai
www.primeindianhospitals.com
044 - 23639999, 9884493140
/primeindianhospital /primeindianhospital /@PrimeIndianHospitals